
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 164 | 4 Pages | 11.1.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 164 | 4 பக்கங்கள் | 11.1.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்**

**விளக்கம்: ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும், காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்து விடும்.**

# திருப்பதி நெரிசலில் சிக்கி பலியானவர் குடும்பத்துக்கு ரூ.2 லட்சம் நிவாரண நிதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜன.11

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறி இருப்பதாவது:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி கிராமம், தாசனூரைச் சேர்ந்த மல்லிகா (வயது 55) நேற்று ஆந்திர மாநிலம், திருமலை திருப்பதி கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய சென்றிருந்தபோது, அங்கு சொர்க்கவாசல் திறப்பிற்காக வழங்கப்பட்ட இலவச தரிசனத்திற்கான நுழைவுச்சீட்டை வாங்கும்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தத் துயரமான செய்தியை அறிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் உடனடியாகத் தெரிவித்துக் கொண்டதுடன், உயிரிழந்த மல்லிகா உடலை அவரது சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சார்பில் மேற்கொள்ள உத்தரவிட்டார்.





மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த மல்லிகா குடும்பத்தினருக்கு 2 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்காவுடன் கனடா ஒருபோதும் இணையப் போவது இல்லை: ஜஸ்டின் ட்ரூடோ



ஒட்டவா, ஜன.11

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ராஜினாமா செய்வதாக அறிவித்து உள்ளார். சொந்த கட்சி மற்றும் கூட்டணி கட்சியின் ஆதரவை இழந்ததால் ஜஸ்டின் ட்ரூடோ இந்த முடிவை எடுத்தார். இந்தாண்டு இறுதியில் கனடாவில் தேர்தல் நடைபெற உள்ளது. கனடாவில் புதிய பிரதமர் தேர்வு செய்யப்படும் வரை ஜஸ்டின் ட்ரூடோவே பிரதமராக நீடிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சூழலில்,அமெரிக்காவின்51வதுமாகாணமாக,கனடாஇணையலாம் என்று அமெரிக்காவின் அதிபராக பதவி ஏற்க உள்ள டொனால்டு டிரம்ப் பேசி வருகிறார். அமெரிக்கா உடன் இணைவதை கனடா மக்களே விரும்புவார்கள் எனக்கூறிய டிரம்ப், வரிகள் குறையும், வர்த்தக பற்றாக்குறை இருக்காது, கனடா பாதுகாப்பாக இருக்கும். அத்துடன், அமெரிக்காபெரிய தேசமாக மாறும், ஒன்றிணைவோம் எனகூறியிருந்தார்.

டிரம்பின் இந்த கருத்து தொடர்பாக தனது மவுனத்தை கலைத்துள்ள ஜஸ்டின் ட்ரூடோ, அமெரிக்காவின் ஒரு பகுதியாக கனடா மாறும் வாய்ப்பே இல்லை என்று கூறியுள்ளார். இது தொடர்பாக ஜஸ்டின்ட்ரூடோ கூறியதாவது: டொனால்டு டிரம்ப் கூறுவது ஒருபோதும் நடக்க போவது இல்லை. கனட மக்கள் கனடா குடிமக்களாக இருப்பதிலேயே பெருமை கொள்கிறார்கள். நாங்கள் அமெரிக்கர்கள் இல்லை. மக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கில் டிரம்ப் இவ்வாறு பேசி வருவதாக நான் கருதுகிறேன்" என்றார்.

## எதிர்க்கட்சி வரிசை உங்களை அவ்வளவு அச்சுறுத்துகிறதா மு.க.ஸ்டாலின் அவர்களே? எடப்பாடி பழனிசாமி தாக்கு

சென்னை, ஜன.11

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி இன்று எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

ஆளுங்கட்சி வரிசையோடும், சபாநாயகரோடும் முடிந்துவிட்டதா சட்டப்பேரவை?

சட்டப்பேரவையின் கேமராக்கள் இன்றும் எதிர்க்கட்சியின் பக்கம் திரும்பவே இல்லை.

எதிர்க்கட்சி வரிசை உங்களை அவ்வளவு அச்சுறுத்துகிறதா மு.க.ஸ்டாலின் அவர்களே? எதற்காக இவ்வளவு அஞ்சி நடுங்குகிறீர்கள்?

"#யார்_அந்த_SIR?" என்ற நீதிக்கான கேள்வி உங்களை அவ்வளவு உறுத்துகிறது என்றால், மீண்டும் கேட்கிறேன், யாரைக் காப்பாற்ற முயற்சிக்கிறது இந்தஸ்டாலின் மாடல் அரசு?

மக்கள் நலனுக்கான, எதிர்க்கட்சியின் கேள்விகளை மக்கள் பார்த்துவிடக் கூடாது என்று ஸ்டாலின் மாடல்






அரசு எத்தனிப்பது ஜனநாயகப் படுகொலை!

தமிழ்நாடு சட்டப்பேரவை நிகழ்வுகளை, எந்தவித ஒளிவு மறைவுமின்றி, முழுமையாக, மக்களின் குரலான எதிர்க்கட்சியின் கருத்துக்களை மக்களுக்கு நேரடி ஒளிபரப்ப வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன். தமிழ்நாடு சட்டமன்றம், பொதுமக்களின் தேவையை சபையேற்றி, சட்டமியற்றி, திட்டமியற்றி செயல்படும் தமிழக மக்களின் மேடை; திமுகவின் பொதுக்கூட்ட மேடையல்ல! என்று தெரிவித்துள்ளார்.

## லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத்தீ: பலி எண்ணிக்கை 10 ஆக உயர்வு



வாஷிங்டன், ஜன.11

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் கடற்கரை பகுதியில் உள்ள வனப்பகுதியில் காட்டுத்தீ பரவத்தொடங்கியது. பலத்த காற்று காரணமாக காட்டுத்தீ நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் வேகமாக பரவி வருகிறது. காட்டுத்தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு, மீட்புக்குழுவினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதனிடையே, காட்டுத்தீ குடியிருப்பு பகுதிகளுக்கும் பரவி வருகிறது. வீடுகள் உள்ளிட்ட கட்டிடங்கள் தீக்கிரையாகி வருகின்றன. காட்டுத்தீ காரணமாக சுமார் 1 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். காட்டுத்தீயால் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு முற்றிலும் நாசமாகியுள்ளது.

இந்நிலையில், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வேகமாக பரவி வரும் காட்டுத்தீயில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. மேலும், 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். மேலும் இந்தகாட்டுத்தீயால் குறைந்தது 10,000க்கும் அதிகமான வீடுகள், கட்டிடங்கள் மற்றும் பிறகட்டமைப்புகள் எரித்துள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## யூத் ரெட் கிராஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் கணேசன் வழிகாட்டுதலின் படியும் கல்லூரி அளவிலான யூத் ரெட் கிராஸ் மாணவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம்

திருவாரூர், ஜன.11


திருவாரூர் மாவட்டம், அம்மையப்பன் குளோபல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி தமிழ்நாடு பிரிவின் நிதியுதவியுடனும், பாரதிதாசன் பல்கலைக்கழக யூத் ரெட் கிராஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் கணேசன் வழிகாட்டுதலின் படியும் கல்லூரி அளவிலான யூத் ரெட் கிராஸ் மாணவர்களு க்கான ஒரு நாள் பயிற்சி முகாம் 08.01.25 அன்று நடைபெற்றது.




இந்நிகழ்வினை கல்லூரியின் நிறுவனர் திரு தியாக பாரி ரெட் கிராஸ் கொடியினை ஏற்றி தலைமை உரையாற்றி துவக்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் லெஷ்மி நாராயணன் வரவேற்புரை வழங்கினார்.

திருவாரூர் மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி யின் செயலாளர் திரு வரதராஜன், துணைத் தலைவர் திரு நடராஜன், துணை செயலாளர் திரு அண்ணா துரை, ஜுனியர் ரெட் கிராஸ் திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் திரு செந்தில் குமார் மற்றும் தீபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முதல் உதவி பயிற்சியினை ஓய்வு பெற்ற தீயணைப்புத்துறை அதிகாரி திரு துளசி துரை மாணிக்கம் அவர்கள் மாணவர்களுக்கு செயல் முறை விளக்கத்துடன் முதல் உதவி பயிற்சியினை வழங்கினார். திரு பால சுந்தரம் அவர்கள் இரத்த தானம் சம்பந்தமான கேள்விகளுக்கு சிறந்த முறையில் விளக்கமளித்தார். பேரிடர் மேலாண்மை மாநில பயிற்றுநர் திரு பெஞ்சமின் அவர்கள் புயல் மற்றும் பூகம்பத்தின் போது தங்களை எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்ற விளக்க பயிற்சியினை மாணவர்களுக்கு வழங்கினார். இறுதியாக கல்லூரியின் யூத் ரெட் கிராஸ் திட்ட அலுவலர் முனைவர் தென்னரசு நன்றியுரை ஆற்றினார். திருவாரூர் மாவட்டத்தினைச் சார்ந்த 10 கும் மேற்பட்ட கல்லூரியினைச் சார்ந்த யூத் ரெட் கிராஸ் மாணவர்கள் , திட்ட அலுவலர்கள் உட்பட 100கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்குக் கொண்டு பயிற்சி பெற்றார்கள். இந்நிகழ்வினை யூத் ரெட் கிராஸ் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் மஞ்சக்குடி சுவாமிதயானந்தகலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியருமாகிய திரு ஏழுமலை அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்

## ஈராக்கில் அமெரிக்க ராணுவம் இருப்பது சட்டவிரோதம் ஈரான் மத தலைவர் குற்றச்சாட்டு



டெஹ்ரான், ஜன.11

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஈராக்கில் அமெரிக்க படைகள் பல ஆண்டுகளாக முகாமிட்டுள்ளன. தங்கள்நாட்டில்இருந்து வெளியேறுமாறு ஈராக் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறபோதும், அமெரிக்கா தனது படைகளை அங்கு நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில் அரசு முறை பயணமாக நேற்று முன்தினம் ஈரானுக்கு சென்ற ஈராக் நாட்டின் பிரதமர் முகமது ஷியா அல் சூடானி, தலைநகர் டெஹ்ரானில் ஈரானின் மூத்த மத தலைவர் அயதுல்லா அலி கமேனியை சந்தித்து பேசினார். இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், மத்திய கிழக்கின் சமீபத்திய முன்னேற்றங்கள், குறிப்பாக சிரியாவின் சூழ்நிலைகள் குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் தீவிரமாக ஆலோசித்தனர்.

அப்போது பேசிய அயதுல்லா அலி கமேனி "ஈராக்கில் அமெரிக்க ராணுவத்தின் இருப்பு முற்றிலும் சட்டவிரோதமானது. இதற்கு எதிராக அரபு நாடுகள் ஓரணியில் திரள வேண்டும். ஈராக்கில் தங்கள் இருப்பை ஒருங்கிணைக்கவும், விரிவுபடுத்தவும் அமெரிக்கர்கள் முயற்சிகளை மேற்கொள்வதற்கான சான்றுகள் உள்ளன. இந்த ஆக்கிரமிப்பை கடுமையாக எதிர்த்து நிற்க வேண்டும்" என தெரிவித்தார்.

அதன் பின்னர் பேசிய ஈராக் பிரதமர் சூடானி காசா மற்றும் லெபனானுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளை கடுமையாக கண்டித்தார். மேலும் காசா மற்றும் லெபனான் மக்களுக்கு ஆதரவளிக்கும் தனது நாட்டின் கொள்கை ரீதியான நிலைப்பாட்டை அவர் சுட்டிக் காட்டினார்.



விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரி கூட்டரங்கில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற 2024 உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தமைக்காக சங்க நிர்வாகிகளுக்கு நினைவுக் கேடயங்களை மாவட்ட கல்க்டர் சி.பழனி, வழங்கினார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சுப்பிரமணி உட்பட பலர் உள்ளனர்.




சென்னையில், தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் ஒற்றுமை பொங்கல் விழாவை சிறப்பாக நடத்தியது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து 300க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர். விழாவில், பாரம்பரிய கலைகள், சிலம்பம், வாழ் வீச்சு, மற்றும் மிமிக்ரி போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் அரிசி, வெல்லம், நெய், முந்திரி, கரும்பு போன்ற பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டன. பத்திரிகையாளர்கள் இந்நிகழ்ச்சியில் உற்சாகமாக கலந்து கொண்டு, பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிட பாஜக விரும்பவில்லை எனத் தகவல்





சென்னை, ஜன.11

பாஜக தேசிய பொதுச் செயலாளர் தருண் சுக் தலைமையில் பாஜக மையக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் அண்ணாமலை, எல். முருகன், வானதி சீனிவாசன், தமிழிசை சவுந்தரராஜன், எச். ராஜா, பொன். ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

இடைத்தேர்தல் தொடர்பாக கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை, அடுத்தக்கட்ட நடவடிக்கைகள்குறித்துகூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது. 2026 சட்டமன்ற தேர்தலை இலக்காக கொண்டுள்ளதால் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என தேசிய தலைமையிடம் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், ஈரோடு கிழக்கு தொகுதியை கூட்டணி கட்சிக்கு கொடுக்கலாம் என பாஜக நிர்வாகிகள் சிலர் கருத்துதெரிவித்துள்ளனர்.

இதனால் இடைத்தேர்தலில் போட்டியிட பாஜக விரும்பவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# ஈரோடு கிழக்கு தொகுதி ரேஷன் கடைகளில் பொங்கல் தொகுப்பு வழங்கும் பணி நிறுத்தி வைப்பு




ஈரோடு, ஜன.11

தமிழக அரசு பொங்கல் பண்டிகையை கொண்டாடும்வகையில்ஒருமுழுக்கரும்பு, ஒருகிலோபச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் இலவச வேட்டி, சேலை ஆகியவை ரேசன் கடைகள் மூலம் குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கப்படும் என அறிவித்தது.

இதையடுத்து பொங்கல் தொகுப்பிற்கான டோக்கன் விநியோகம் செய்யும் பணி கடந்த 3ந் தேதி முதல் 8ந் தேதி வரை நடந்தது.

இதன் ஒரு பகுதியாக ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, கோபி, பவானிசாகர், அந்தியூர், பவானி, பெருந்துறை, கொடுமுடி என மாவட்ட முழுவதும் உள்ள 172 கூட்டுறவு சங்கத்தின் கீழ் 878 முழு நேர ரேசன் கடைகள், 355 பகுதிநேர கடைகள் என 1,233 ரேசன் கடைகளில் 7 லட்சத்து 44 ஆயிரத்து 463 அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கும் மற்றும் இலங்கை வாழ் தமிழர்கள் முகாமில் உள்ள 1,379 குடும்பத்தினருக்கும் என மொத்தம் மாவட்ட முழுவதும் 7 லட்சத்து 45 ஆயிரத்து 842 அட்டை தாரர்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்பு டோக்கன் வழங்கும் பணி நடந்து நேற்றுடன் முடிவடைந்தது.

இதையடுத்து இன்று முதல் வரும் 13ந் தேதி வரை அந்தந்த ரேசன் கடைகளில் பொதுமக்கள் பொங்கல் சிறப்பு தொகுப்பை வாங்கிக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

சென்னையில் நடந்த விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொங்கல் தொகுப்பை வழங்கி தொடங்கி வைத்தார். இதையடுத்து தமிழகம் முழுவதும் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு மேற்கு, பெருந்துறை, மொடக்குறிச்சி, பவானி, அந்தியூர், கோபி, பவானி சாகர் ஆகிய 7 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள ரேசன் கடைகளில் இன்று காலை முதல் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் ஈரோடு கிழக்கு தொகுதியில் தற்போது இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள 100க்கும் மேற்பட்ட ரேசன் கடைகளில் பொங்கல் தொகுப்பு வழங்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தந்த ரேஷன் கடைகளில் தேர்தல் நடைமுறை அமலில் உள்ளதால் பொங்கல் தொகுப்பு வழங்க அனுமதி கோரி உள்ளோம். அனுமதி கிடைத்தவுடன் பொங்கல் தொகுப்பு வழங்கப்படும் என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இன்று காலை பொங்கல் தொகுப்பு வாங்க வந்த ஈரோடு கிழக்கு தொகுதி மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். ஈரோடு கிழக்கு தொகுதியில் மட்டும் மொத்தம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர்.

# சட்டசபைக்கு செல்லவில்லையா? என தொகுதி மக்கள் கேட்கிறார்கள் ஆர்.பி.உதயகுமார் பேச்சு

சென்னை, ஜன.11

தமிழக சட்டசபையில் இன்று கேள்வி நேரம் முடிந்ததும் நேரமில்லா நேரத்தில் எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் நேரடி ஒளிபரப்பு தொடர்பான ஒரு பிரச்சனையை எழுப்பி பேசினார்.

அப்போது அவர் கூறும்போது, சட்டசபையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பேசியதை நேற்று நேரடி ஒளிபரப்பாக காட்டவில்லை. இதனால் தொகுதி மக்கள் சட்டசபைக்கு செல்லவில்லையா? என்று என்னை பார்த்து கேட்கிறார்கள். சட்டமன்றம் அனைவருக்கும் பொதுவானதுதானே. ஏன் இத்தகைய மாற்றத்தை செய்தீர்கள் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த சபாநாயகர் அப்பாவு, 'திட்டமிட்டு அது போன்று செயல்படவில்லை. அது பற்றி விசாரித்து சொல்கிறேன்' என்றார்.

# பல்கலைக்கழக துணைவேந்தர் நியமன விவகாரம்: யுஜிசி நகலை எரித்து மாணவர்கள் போராட்டம்



தஞ்சாவூர், ஜன.11

பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் தேடுதல் குழுவை கவர்னரே நியமிக்கும்யுஜிசிஅறிவிப்பை திரும்ப பெற வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் இன்று பல்கலைக்கழகம், கல்லூரிகளில் இந்திய மாணவர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்படி தஞ்சை அரசு மன்னர் சரபோஜி கல்லூரியில் இன்று காலை இந்திய மாணவர் சங்கத்தினர் போராட்டம் நடத்தினர். இதற்கு மாநில செயலாளர் அரவிந்த்சாமி தலைமை தாங்கினார். கிளை தலைவர் ரஞ்சித் முன்னிலை வகித்தார்.

அப்போது யுஜிசி புதிய வழிகாட்டுதல் அறிவிப்பு நகலை மாணவர்கள் தீயிட்டு எரித்து மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

உடனடியாக போலீசார் தண்ணீர் ஊற்றி அணைத்தனர்.

இந்த போராட்டத்தில் ஏராளமான மாணவமாணவிகள் கலந்து கொண்டனர். நகலை தீயிட்டு மாணவர்கள் எரித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# டங்ஸ்டன் திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் அமைச்சர் மூர்த்தி



மேலூர், ஜன.11

மதுரை மாவட்டம் மேலூர் அருகே அரிட்டாபட்டி உள்ளிட்ட கிராமங்களில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து கிராம மக்கள் பல்வேறு கட்ட போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

பெரியாறு பாசனவிவசாயிகள் சங்கம் சார்பில் மாபெரும் பேரணி நடந்தது. மேலூர்நரசிங்கம் பட்டியில் இருந்து நூற்றுக்கணக்கான வாகனங்களிலும், நடைபயணமாகவும், 50க்கும் மேற்பட்டோர் மதுரைக்கு பேரணியாக வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் வெள்ளமென திரண்டு பொதுமக்கள், விவசாயிகள் எழுச்சியுடன் பங்கேற்றனர்.

இந்தநிலையில் இன்று காலை அரிட்டாபட்டி கிராமத்திற்கு சென்ற அமைச்சர் மூர்த்தி பொதுமக்களிடம் விளக்கம் அளித்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழக சட்டமன்றத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க கூடாது என அனைத்து கட்சியினரும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு தமிழக அரசின் நிலைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டன.

இருந்தாலும்மக்களுக்கு அச்சத்தைப் போக்குகின்ற வகையிலே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கிராம மக்களிடம் எடுத்து கூறி இருக்கின்றோம். நமது திராவிட மாடல்ஆட்சிஒருபோதும் மதுரை மேலூர் பகுதியில் டங்ஸ்டன் வருவதற்கு அனுமதிக்காது.

இங்கிருந்து ஒரு பிடி மண்ணைக் கூட எடுத்துச் செல்ல முடியாது என்று சட்டமன்றத்திலே நிதி அமைச்சர் உறுதி அளித்திருக்கிறார்.

தமிழக முதலமைச்சரின் பரிந்துரைப்படி மாவட்ட கலெக்டர், மாவட்ட கண்காணிப்பாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளுடன் மக்களின் அச்சத்தை போக்குகின்ற வகையிலே தமிழக முதல்வரின்கருத்தை மக்களிடம் எடுத்துரைத்திருக்கிறோம்.

நிச்சயமாக டங்ஸ்டன் சுரங்க திட்டம் வராமல் இருக்க அத்தனை நடவடிக்கையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்திருக்கிறார்.

யார், யார் எதையெல்லாம் வந்து இங்கு சொன்னாலும் இந்த பகுதி மக்களை பாது காக்கின்ற பொறுப்பு எங்கள் கடமை என்று தமிழக முதல்அமைச்சர் சொல்லி இருக்கிறார். டங்ஸ்டன் பேரணி தொடர்பாக 5 ஆயிரம் பேர் மீது தொடரப்பட்ட வழக்கு ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து அமைச்சர் பி.மூர்த்தி, மேலூர் வட்டத்திற்கு உட்பட்ட அ. வல்லாளப்பட்டி, கிடாரிப்பட்டி, தெற்கு தெரு, நரசிங்கம்பட்டி ஆகிய பகுதிகளிலும் பொதுமக்களை நேரில் சந்தித்து டங்ஸ்டன் தொடர்பாக தமிழகஅரசின்நிலைபாடுகளை எடுத்து ரைத்தார்.

இந்த பொதுமக்கள் சந்திக்கும் நிகழ்ச்சியில் கலெக்டர் சங்கீதா உள்ளிட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வீராணம் ஏரியை பார்வையிட்ட வெளிநாடு வாழ் தமிழர்கள்



காட்டுமன்னார் கோவில், ஜன.11

தமிழக அரசு அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேர்களை தேடி என்ற புதிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் பல தலைமுறைகளுக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்து தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களை கண்டறிந்து அவர்களை ஒருங்கிணைத்து தமிழ் மொழியின் சிறப்புகள், தமிழகத்தில் பாரம்பரிய சிறப்புமிக்க கட்டிட கலையின் சிறப்பம்சங்களை வெளிப்படுத்தும் கோவில்கள், அகழ்வாராய்ச்சி மையங்கள், புகழ்பெற்ற நீர் நிலைகள் ஆகியவற்றை பார்வையிட்டு அவற்றின் பெருமைகளை உலகுக்கு தெரிவிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதன் படி, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே பராந்தக சோழனால் கட்டப்பட்டவீராணம்ஏரியை வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை கண்காணிப்பாளர் கனிமொழி தலைமையில் இலங்கை, கனடா, உகாண்டா, தென் அமெரிக்கா, மோரிஷீயஸ், ஆஸ்திரேலியா, நார்வே, அமெரிக்கா உள்ளிட்ட 10 நாடுகளை சேர்ந்த வெளிநாடு வாழ் தமிழர்குழுவினர்பார்வையிட்டு அதன் பெருமைகளையும், சிறப்புகளையும் கேட்டறிந்தனர்.

முன்னதாக இந்த குழுவினர் கீழடி, தஞ்சை பெரிய கோவில், ராமேசுவரம், தாராசுரம்கங்கைகொண்ட சோழபுரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை பார்வையிட்டு வந்ததாக கூறினார்கள்.

ஆய்வின் போது தாசில்தார் சிவகுமார் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# யுஜிசியின் புதிய விதிகளை கண்டித்து மாணவர் அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜன.11

பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் தேடுதல் குழுவை கவர்னரே நியமிக்கும்யுஜிசிஅறிவிப்பை திரும்ப பெற வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் இன்று பல்கலைக்கழகம், கல்லூரிகளில் இந்திய மாணவர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்படி தஞ்சை அரசு மன்னர் சரபோஜி கல்லூரியில் இன்று காலை இந்திய மாணவர் சங்கத்தினர் போராட்டம் நடத்தினர். இதற்கு மாநில செயலாளர் அரவிந்த்சாமி தலைமை தாங்கினார். கிளை தலைவர் ரஞ்சித் முன்னிலை வகித்தார்.

அப்போது யுஜிசி புதிய வழிகாட்டுதல் அறிவிப்பு நகலை மாணவர்கள் தீயிட்டு எரித்து மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். உடனடியாக போலீசார் தண்ணீர் ஊற்றி அணைத்தனர். இந்த போராட்டத்தில் ஏராளமான மாணவமாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில், யுஜிசியின்புதியவிதிமுறைகளை கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக நாளை வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

9 ஜனவரி 2025 2:16 PM

சட்டசபை கூட்டத்தில் பங்கேற்க வந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் கருப்பு சட்டை அணிந்து வந்தனர்.

சட்டையில் 'யார் அந்த சார்?' என்ற வாசகம் அடங்கிய பேட்ஜும் அணிந்திருந்தனர். சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட விவகாரத்தை கண்டித்து நேற்று சட்டசபை கூட்டத்தில் பங்கேற்க வந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் கருப்பு சட்டை அணிந்து வந்தனர்.

இந்த நிலையில் இன்றும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் கருப்பு சட்டை அணிந்தே சட்டசபை கூட்டத்துக்கு வந்திருந்தனர். மேலும் சட்டையில் 'யார் அந்த சார்?' என்ற வாசகம் அடங்கிய பேட்ஜும் அணிந்திருந்தனர்.

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவி எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக விசாரிக்க தேர்தல் ஆணையத்துக்கு தடை: ஐகோர்ட்



சென்னை, ஜன.11

அ.தி.மு.க. உள்கட்சி விவகாரம் தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகளில் முடிவு காணும் வரை அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க கூடாது.

இதுகுறித்து 2017ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை தேர்தல் ஆணையத்துக்கு புகார் மனு அனுப்பியுள்ளேன். என் மனுவை பரிசீலிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என சூரியமூர்த்தி என்பவர் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின் போது மனுதாரரின் கோரிக்கை 4 வாரத்தில் பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என தேர்தல் ஆணையம் தரப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட ஐகோர்ட்டு நான்கு வாரங்களில் சூரியமூர்த்தி மனுவை பரிசீலித்து முடிவெடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி வரும் நிலையில், அ.தி.மு.க. பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதை அங்கீகரிக்க கூடாது என முன்னாள் எம்.பி. ரவீந்திர நாத் மற்றும் கே.சி.பழனிசாமி ஆகியோர் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்திருந்தனர்.

இந்த மனுவின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தவழக்குநீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன் மற்றும் சி.குமரப்பன் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் ஆரிமா சுந்தரம், கட்சியில் உறுப்பினர்களாக இல்லாத தனிப்பட்ட நபர்கள் கட்சி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்து தேர்தல் ஆணையத்தில் முறையிட்டு இருக்கிறார்கள். இதை விசாரிக்க தேர்தல் ஆணையத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரம் தொடர்பாக உரிமையியல் வழக்குகள் நிலுவையில் இருக்கக்கூடிய நிலையில் அதே விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த முடியாது என கூறி தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர்.

மேலும் மனுவுக்கு 27ந்தேதிக்குள் பதில் அளிக்கும் படி தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் தள்ளி வைத்துள்ளனர்.

# பழனி கோவில் தேவஸ்தானத்தில் 296 காலிப்பணியிடங்களுக்கு 1 லட்சம் பேர் விண்ணப்பம்



பழனி, ஜன.11

தமிழகத்தில் அதிக பக்தர்கள் வரும் கோவில்களில் முதன்மையானது பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலாகும். இந்த கோவிலில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தது.

இதனால் சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவிலில் காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என தேவஸ்தானத்துக்கு கோரிக்கை விடுத்து வந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் 3ந்தேதி பழனி கோவில் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் காலியாக உள்ள 296 பணியிடங்களை நிரப்ப அழைப்பு விடுக்கப்பட்டது.

இளநிலை உதவியாளர், சீட்டு விற்பனையாளர், சத்திரம் காப்பாளர், சுகாதார மேஸ்திரி தூய்மை பணியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், உதவி மின் பொறியாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களை நிரப்ப அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.

நேரடியாகவும், தபால் மூலமாகவும் கோவில் அலுவலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அறிவிக்கப்பட்டு இருந்தது. இதற்கான கடைசி தேதி ஜனவரி 8ந் தேதி என அறிவிக்கப்பட்டது.

இதனால் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பம் அளித்திருந்தனர். நேற்று மாலை வரை சுமார் 1 லட்சம் விண்ணப்பங்கள் இந்த பணியிடங்களுக்காக வரப்பட்டதாக கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக கோவிலில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்த நிலையில் அரசு வேலை கனவில் இருக்கும் பட்டதாரி இளைஞர்கள் ஆர்வமுடன் விண்ணப்பம் அளித்தனர்.

விண்ணப்ப மனுக்கள் மூட்டை மூட்டையாக தேவஸ்தான அலுவலகத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இவை பரிசீலனை செய்யப்பட்டு எந்த தேதிகளில் நேர்முகத் தேர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட உள்ளது. வெளிப்படையான முறையில் தகுதியானவர்களை தேர்வு செய்து பணியமர்த்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இந்து முறைப்படி திருமணம் செய்த தைவான் காதல் ஜோடி



சீர்காழி, ஜன.11

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த காரைமேடு சித்தர்புரத்தில் 18 சித்தர்கள் அருள்பாலிக்கும் பிரசித்தி பெற்ற ஒளிலாயம் சித்தர்பீடம் உள்ளது. இங்கு தமிழகம் மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சீனா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், தைவான் உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து வழிபாடு நடத்தி செல்வது வழக்கம். இந்த சித்தர்பீடத்தில் தைவான் நாட்டை சேர்ந்த இமிங், சு ஹூவா ஆகிய இருவரும் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டனர்.

இருவரும் காதலித்து வந்த நிலையில் தைவான் நாட்டில் திருமணம் செய்து கொண்டனர். தொடர்ந்து இந்தியாவில் இந்து முறைப்படி திருமணம் செய்து கொள்ள இருவரும் விரும்பினர். இதைத்தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு வந்த இருவரும் சீர்காழி அருகே உள்ள ஒளிலாயம் சித்தர் பீடத்தில் நேற்று சிவாச்சாரியார்கள் அருண், கணேஷ் முன்னிலையில் அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, பாத பூஜை செய்து திருமணம் செய்து கொண்டனர்.

திருமணத்தில் கலந்து கொள்வதற்காக தைவான் நாட்டில் இருந்து வந்திருந்த இருவரின் உறவினர்களும் பட்டு வேட்டி, பட்டு சேலை அணிந்து தமிழர்களின் மரபுப்படி மணமக்களை வாழ்த்தினார். தைவான் நாட்டை சேர்ந்தவர்களின் திருமணத்தில் சுற்று வட்டார பகுதி கிராம மக்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். தொடர்ந்து அனைவருக்கும் மதிய விருந்து வழங்கப்பட்டது.

# கருங்கல்பாளையம் சோதனைச் சாவடியில் ரூ.1 லட்சம் பணம் பறிமுதல்: பறக்கும் படையினர் நடவடிக்கை



ஈரோடு, ஜன.11

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்து வருகிறது.

இந்நிலையில் வாடிக்கையாளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் 3 தேர்தல் பறக்கும் படை அமைக்கப்பட்டு அவர்கள் 24 மணி நேரமும் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக ஈரோடு கருங்கல்பாளையம் சோதனைச் சாவடியில் 24 மணி நேரமும் பறக்கும் படையினர் தீவிரமாக கண்காணித்து அந்த வழியாக வரும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து உரிய ஆவணங்கள் இருப்பதை உறுதி செய்த பின்னரே உள்ளே அனுமதித்து வருகின்றனர்.

இந்நிலையில் இன்று காலை கருங்கல்பாளையம் சோதனைச்சாவடியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக ஈரோடு நோக்கி ஒரு கார் வந்து கொண்டிருந்தது.

காரை நிறுத்தி தேர்தல் பறக்கும் படையினர் சோதனை நடத்தினர். காரில் ரூ.1 லட்சம் பணம் இருப்பது தெரியவந்தது. ஆனால் அந்த பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லை.

இதையடுத்து காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தியதில் அவர் சங்ககிரி பெருமாள்காட்டு வலசு பகுதியைச் சேர்ந்த அரசு ஒப்பந்ததாரர் என தெரியவந்தது. அவரிடம் பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.1 லட்சம் ரொக்க பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படை அதிகாரிகள் அந்த பணத்தை ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு முதல் முதலாக பணம் பிடிபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ராணிப்பேட்டை அருகே பேருந்தும் வேனும் மோதி விபத்து 4 பேர் பலி

ராணிப்பேட்டை. ஜன.11

ராணிப்பேட்டை அடுத்த சிப்காட் MBT சாலையில் பேருந்தும், ஈச்சர் வேனும் மோதிய விபத்தில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் 4 பேர் உயிரிழந்த நிலையில், காயமடைந்த 50க்கும் மேற்பட்டோர் வாலாஜாபேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் மீட்பு பணியில் ஈடுபட்டு, போக்குவரத்து சீர் செய்தனர். மேலும் விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொடைக்கானலில் தொடரும் உறைபனி: பூங்காவில் மலர் நாற்றுகளை பாதுகாக்க போர்வை



கொடைக்கானல், ஜன.11

கொடைக்கானலில் கடந்த மாதம் முதல் கடுமையான பனி நிலவி வருகிறது. இந்த மாதத்தின் தொடக்கத்தில் 7 டிகிரி செல்சியசுக்கு கீழ் வெப்பநிலை சென்றதால் பல்வேறு இடங்களில் உறைபனி காணப்பட்டது. இதனால் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமமடைந்தனர்.

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் கோடை விழா, மலர் கண்காட்சி நடத்தப்படும். அதன்படி இந்த ஆண்டு 62வது மலர் கண்காட்சிக்காக கடந்த சில வாரங்களுக்கு முன்பு முதற்கட்ட மலர் செடிகள் நடவு நடைபெற்றது.

தற்போது 40 ஆயிரம் மலர் நாற்றுகள் நடப்பட்டுள்ளன. இதில் சால்வியா, பிங்க் ஆஸ்டர், ஒயிட் ஆஸ்டர், டெல்பினியம், லில்லியம் உள்ளிட்ட 10 வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன.

கடந்த சில நாட்களாக மனிதர்களை மட்டுமின்றி மலர் செடிகளையும் பனி கடுமையாக பாதித்து வருகிறது. மதியம் 3 மணிக்கு மேல் தொடங்கும் பனியின் தாக்கம் மறுநாள் காலை 10 மணிவரை நீடிக்கிறது.

இதனால் மலர் நாற்றுகள் கருகுவதை தவிர்க்க பூங்கா நிர்வாகம் சார்பில் செடிகளுக்கு நிழல்வலை அமைப்பு கொண்ட பனிப்போர்வை போர்த்தப்பட்டுள்ளது. பனிக்காலம் முடியும் வரை இந்த போர்வை இருக்கும் என்று பூங்கா நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான பனியின் தாக்கம் அதிகரித்து வருவதால் கொடைக்கானலில் வார நாட்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறைவாகவே காணப்படுகிறது.

# கடுங்குளிரால் மக்கள் அவதி ஊட்டி, குன்னூரில் கொட்டி தீர்க்கும் உறைபனி



ஊட்டி, ஜன.11

ஊட்டியில் கடந்த சில நாட்களாக உறைபனியின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் அங்குள்ள பல்வேறு பகுதிகள் காஷ்மீர் போலவே பனிகள் படர்ந்து காட்சியளிக்கின்றன.

அதிலும் குறிப்பாக ஊட்டி குதிரை பந்தய மைதானம், காந்தல், தலைகுந்தா உள்ளிட்ட பகுதியில் உள்ள புல்வெளி மைதானங்களில் உறைபனி படிந்து உள்ளது. இதன் காரணமாக பச்சைப் பசேலென காட்சியளிக்கும் புற்கள், தற்போது வெள்ளை கம்பளம் போர்த்தியது போல் வெண்மையாக காணப்பட்டது.

மேலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் மீது உறைப்பனி கொட்டி கிடந்ததால் வாகனங்களும் வெள்ளை நிறமாக காட்சி அளித்தன. அதிகாலை நேரத்தில் இருசக்கர வாகனங்கள் மீது கொட்டி கிடந்த உறைபனியை வாகன ஓட்டிகள் அகற்றுவதை பார்க்க முடிந்தது.

ஊட்டியின் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மலை காய்கறி தோட்டங்களில் உறைபனி மற்றும் குளிரின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது.

இதனால் தொழிலாளர்கள் வெம்மை ஆடைகளை அணிந்து உறைப்பனியிலும் கேரட் அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மார்க்கெட் சுமை தூக்கும் தொழிலாளர்கள், அங்குள்ள பகுதிகளில் ஆங்காங்கே தீ மூட்டி குளிர்காய்ந்து வருகின்றனர்.

உறைபனி தாக்கத்தால் செடி, கொடி மற்றும் புற்கள் காய்ந்து வறட்சியான கால நிலை நிலவுவதால் கால்நடைகளுக்கு பசுந்தீவன தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை உள்ளது. ஊட்டியின் புறநகர பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்களில் உறைப்பனி தாக்கத்தால் செடிகள் கருகி மகசூல் அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது.

இதனால் விவசாயிகள் 'கோத்தகிரி மலார்' செடிகளை கொண்டு தேயிலை தோட்டங்களை மூடி வைத்து பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டு உள்ளனர்.

ஊட்டியில் ஜனவரி மாதம் இறுதிவரை உறைப்பனி தென்படும் சூழல் இருப்பதால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டு உள்ளது.

குன்னூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த ஆண்டுகளை விட இந்தாண்டு உறைபனி அதிகமாக காணப்பட்டது. அதிலும் குறிப்பாக குன்னூர் மற்றும் புறநகர பகுதிகளான ஜிம்கானா, ஸ்டாப் காலேஜ், வெலிங்டன் உள்ளிட்ட பகுதிகளில் இன்று காலை உறைபனிப்பொழிவு கொட்டி தீர்த்தது. இதனால் அங்குள்ள புல்வெளிகள் மீது உறைபனி படிந்து வெள்ளை கம்பளம் போர்த்தியது போல காட்சியளித்தது.

குன்னூர் நகரில் சராசரி வெப்பநிலை 2.6 டிகிரி செல்சியஸ் ஆகவும், சமவெளி பகுதிகளில் 0 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகி உள்ளது. கடும் குளிர் நிலவி வருவதால் அங்கு வசிக்கும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

# பல்லடம் அருகே லாரி கவிழ்ந்து 90ஆயிரம் முட்டைகள் சேதம்



பல்லடம், ஜன.11

நாமக்கல்லில் இருந்து கோவைக்கு 90 ஆயிரம் முட்டைகளை ஏற்றி கொண்டு மினி லாரி ஒன்று நேற்று இரவு புறப்பட்டது. அதனை நாமக்கல்லை சேர்ந்த நந்தகுமார் என்பவர் ஓட்டினார். அவருடன் கந்தசாமி என்பவரும் உடன் வந்தார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள காளிவேலம்பட்டி பிரிவு என்ற இடம் அருகே சென்ற போது திடீரென ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி தாறுமாறாக ஓடி சாலையில் கவிழ்ந்தது. இதில் முட்டைகள் உடைந்து சாலையில் ஆறாக ஓடியது. மேலும் அந்த வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்த பல்லடம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கிரேன் மூலம் லாரியை அப்புறப்படுத்தினர்.

இந்த விபத்தில் லேசான காயம் அடைந்த நந்தகுமார் மற்றும் கந்தசாமி ஆகியோருக்கு பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பொங்கல் தொகுப்பில் ரூ.1000 தரவில்லை ஆத்திரத்தில் கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர்



நெல்லை, ஜன.11

நெல்லை மாவட்டத்தின் மையப்பகுதியான வண்ணார்பேட்டை கொக்கிரகுளம் பகுதியில் தாமிரபரணி ஆற்றங்கரையில் நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகம் அமைந்துள்ளது.

இங்கு ஊரக வளர்ச்சி முகமை, வருவாய்த் துறை, மகளிர் திட்டம், மாற்றுத்திறனாளிகள் துறை என 20க்கும் மேற்பட்ட துறை சார்ந்த அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் பாளை தாலுகா அலுவலகம், இசேவை மையம், தபால் நிலையம் உள்ளிட்டவையும் இயங்கி வருகிறது.

இங்கு பல்வேறு பணிகளுக்காகவும் தினமும் நூற்றுக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். எப்போதும் பரபரப்பாக இயங்கி கொண்டிருக்கும் கலெக்டர் அலுவலகத்தில் பாதுகாப்பு கருதி இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீசார் சுழற்சி முறையில் பணியாற்றி கொண்டு இருப்பார்கள். மேலும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசாரும் பணியில் ஈடுபடுவது வழக்கம்.

இந்நிலையில் நெல்லை மாநகர போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு இன்று அதிகாலை 1.20 மணி அளவில் மர்ம நபர் ஒருவர் போன் செய்துள்ளார். அப்போது பேசிய நபர், நெல்லையில் இருந்து பேசுகிறேன். நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் வெடிகுண்டு வைத்துள்ளேன் என்று கூறிவிட்டு போனை வைத்து விட்டார்.

இந்த தகவல் மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹடிமனிக்கு தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அவரது உத்தரவின்பேரில் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் கலெக்டர் அலுவலகத்துக்கு விரைந்து சென்றனர்.

வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசாரும் அங்கு விரைந்து சென்றனர். தொடர்ந்து மெட்டல் டிடெக்டர் மூலமாக அங்குலம் அங்குலமாக ஒவ்வொரு கட்டிடத்தையும் சோதனை செய்தனர்.

மேலும் போலீசாரும் மோப்பநாய் மூலமாக கட்டிடங்கள், அரசு வாகனங்கள் உள்ளிட்டவற்றை சோதனை செய்தனர். கலெக்டர் அலுவலகம் முழுவதும் சுமார் 1 மணி நேரத்துக்கும் மேலாக நடந்த இந்த சோதனையில் வேறு எதுவும் சிக்கவில்லை. இதனை தொடர்ந்து அனைவரும் நிம்மதி அடைந்தனர்.

பின்னர் கட்டுப்பாட்டு அறைக்கு மிரட்டல் அழைப்பு வந்த செல்போன் எண்ணை போலீசார் செல்போன் சிக்னல் மூலமாக ஆய்வு செய்தனர். அப்போது அந்த சிக்னல் பேட்டை ஆசிரியர் காலனியை காட்டியது. உடனடியாக பேட்டை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு போலீசார் அங்கு விரைந்தனர்.

அங்குள்ள 3வது தெருவில் விசாரணை நடத்திய போது கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் செய்யது அப்துல் ரஹ்மான்(வயது 45) என்பது தெரியவந்தது.

இதையடுத்து அவரை போலீசார் பேட்டை போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு வைத்து நடத்திய விசாரணையில், செய்யது அப்துல் ரஹ்மான் பேட்டை பகுதியில் கார் டிங்கரிங் மற்றும் வெல்டிங் தொழிலாளியாக வேலை பார்த்து வருவரு தெரியவந்தது. இவருக்கு மனைவி , ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

சமீபத்தில் செய்யது அப்துல்ரஹ்மானின் மனைவி, தமிழக அரசின் திட்டமான மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் ரூ.1000 கேட்டு விண்ணப்பித்துள்ளார். ஆனால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இதனிடையே பொங்கல் பரிசு தொகுப்பில் ரூ.1000 வழங்கப்படும் என்று எதிர்பார்த்த நிலையில், பணம் வழங்கப்படவில்லை என்பதால் செய்யது அப்துல் ரஹ்மான் அதிர்ச்சி அடைந்ததாக கூறப்படுகிறது.

ஏற்கனவே மகளிர் உரிமை தொகையும் கிடைக்காத நிலையில், பொங்கலுக்கு எதிர்பார்த்த ஆயிரம் ரூபாயும் தரவில்லையே என்று செய்யது அப்துல் ரஹ்மான் ஆத்திரம் அடைந்துள்ளார்.

உடனே நேற்று மாலை பேட்டையில் உள்ள ஒரு டாஸ்மாக் கடைக்கு சென்று மது அருந்திய அவர், இரவில் மதுபோதையின் உச்சத்தில் கட்டுப்பாட்டு அறைக்கு போன் செய்து வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து செய்யது அப்துல் ரகுமானை பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

# திருப்பூரில் பொங்கல் திருவிழா: வெள்ளை சேலை அணிந்து சுமங்கலிப் பெண்கள் நேர்த்திக்கடன்



மங்கலம், ஜன.11

திருப்பூர் பூமலூர் ஊராட்சிக்குட்பட்ட நடுவேலம்பாளையம் பகுதியில் மாரியம்மன் கோவில், பட்டத்தரசியம்மன் கோவில் ஒரே வளாகத்தில் உள்ளது. இந்த கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் பொங்கல் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டு திருவிழாவானது கடந்த 31ந்தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. அதனைத்தொடர்ந்து தினந்தோறும் மாரியம்மன், பட்டத்தரசியம்மனுக்கு அலங்கார பூஜைகள், சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சக்தி கும்பம், சக்தி கரகம் எடுத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர் நடுவேலம்பாளையம், லட்சுமிநகர் பொதுமக்கள் பொங்கல் வைத்து வழிபட்டனர். திரளான பக்தர்கள் மாவிளக்கு எடுத்து வந்து சாமி தரிசனம் செய்தனர். சுமங்கலிப்பெண்கள் தங்களின் வேண்டுதல் நிறைவேற வெள்ளை நிற சேலை அணிந்து வந்து மாரியம்மனை தரிசனம் செய்தனர்.

இது குறித்து பக்தர்கள் கூறுகையில், சுமங்கலி பெண்கள் அம்மனை நினைத்து வெள்ளை சேலை அணிந்து வீடு தோறும் மடிப்பிச்சை எடுத்து கோவிலில் செலுத்தினால் அவர்கள் நினைத்த காரியம் ஒரு வருடத்தில் நிறைவேறும். இதனால் சுமங்கலி பெண்கள் பலர் வெள்ளை சேலை அணிந்து வழிபாடு நடத்துகின்றனர் என்றனர்.

# மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு 8 ஆயிரம் கனஅடியாக குறைப்பு

டேட்டூர், ஜன.11

காவிரி டெல்டா பாசன பகுதிகளில் மழை பெய்து வந்ததால் கடந்த 31ந்தேதி மேட்டூர் அணை ஒரே ஆண்டில் 3வது முறையாக தனது முழு கொள்ளளவை எட்டியது. இதனால் அணைக்கு வருகின்ற தண்ணீரை விட, கூடுதலாக அணையில் இருந்து தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்பட்டு வந்தது. கடந்த 3ந்தேதி முதல் அணையிலிருந்து காவிரி ஆற்றில் வினாடிக்கு 12,000 கனஅடியும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 300 கன அடி நீரும் வெளியேற்றப்பட்டு வந்தது.

நீர்வரத்தை விட தினமும் கூடுதலாக நீர் திறந்து விடப்பட்டதால் மேட்டூர் அணை நீர்மட்டம் 120 அடியில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக சரிந்து கொண்டே வந்தது. இதனால் டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீர் கடந்த 6ந்தேதி 12 ஆயிரம் கன அடியில் இருந்து வினாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

இந்த நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1000 கன அடிக்கு கீழ் குறைந்துள்ளது. இன்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 831 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நீர்மட்டம் 116.10 அடியாகவும், நீர் இருப்பு 87.38 டி.எம்.சி.யாகவும் உள்ளது. நீர்வரத்து 1000க்கும் கீழ் சரிந்துள்ளதால் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பின் அளவை மேலும் குறைத்துள்ளனர்.

அதன்படி காவிரி ஆற்றில் வினாடிக்கு 8,000 கன அடி தண்ணீரும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 300 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது.

# கோயம்பேடு மார்க்கெட்டில் சிறப்பு சந்தை தொடக்கம்

சென்னை, ஜன.11

பொங்கல் பண்டிகை வருகிற 14ந்தேதி(செவ்வாய்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதை யொட்டி கரும்பு, மஞ்சள் கொத்து, இஞ்சி கொத்து உள்ளிட்ட பொங்கல் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் வாங்கி சென்றிட வசதியாக கோயம்பேடு மார்கெட்டில்சிறப்புசந்தைதொடங்கப்பட்டு உள்ளது.



இன்று முதல் 16ந்தேதி வரைசிறப்புசந்தைசெயல்படுகிறது. விழுப்புரம், கடலூர், சேலம், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து கரும்பு, மஞ்சள், மண்பாளை உள்ளிட்ட பொருட்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளன.

கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் மட்டுமின்றி மற்ற பகுதி வியாபாரிகளும் பொருட்களை கொண்டு வந்து விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறப்பு சந்தைக்கு ஏராளமான பொதுமக்கள் வருவார்கள் என கருதப்படுவதால் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அங்காடி நிர்வாகம், போக்குவரத்து போலீசார் ஈடுபட உள்ளனர்.

மேலும் விற்பனையின் போது வியாபாரிகள் கொடுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே பொருட்களை விற்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# குரூப் 4ல் கூடுதலாக 41 காலி பணியிடங்கள் சேர்ப்பு

சென்னை, ஜன.11

குரூப் 4ல் கூடுதலாக 41 காலி பணியிடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

கூடுதலாக 41 பணியிடங்களை சேர்த்ததன் மூலம் குரூப்4 தேர்வில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை 9532 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

# அரையாண்டு தேர்வில் முதல் மதிப்பெண் பெறாததால் மாணவன் தற்கொலை

கோவை, ஜன.11

கோவை அருகே உள்ள வடவள்ளி மகாராணி அவென்யூ நகரை சேர்ந்தவர் பியூலா. இவருடைய மகன் சசீந்திரா(வயது 14). இவன் அந்த பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளிக்கூடத்தில் 9ம் வகுப்பு படித்து வந்தான். நன்றாக படித்து வந்த சசீந்திரா வகுப்பில் எப்போதுமே முதல் மதிப்பெண் எடுப்பது வழக்கம். அதன்படி, கடந்த மாதம் நடந்த அரையாண்டு தேர்வை சசீந்திரா நன்றாக எழுதி இருந்தான்.

விடுமுறை முடிந்து கடந்த வாரம் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. அங்கு சென்றதும் அரையாண்டு தேர்வு விடைத்தாள் திருத்தி வழங்கப்பட்டது. தொடர்ந்து மதிப்பெண் அட்டையும் வழங்கப்பட்டது. வழக்கமாக தேர்வில் முதலிடம் பிடிக்கும் சசீந்திராவுக்கு, அரையாண்டு தேர்வில் 2ம் இடம்தான் கிடைத்தது. பள்ளியிலேயே எப்போதும் முதல் இடத்தில் வரும் சசீந்திரா, இந்த முறை 2வது இடத்துக்கு வந்ததால் மனம் உடைந்தான். இது குறித்துதனது நண்பர்களிடம்கூறிஅழுது புலம்பினான்.

வீட்டுக்கு சென்ற அவன் தனது தாயாரிடமும் அது பற்றி கூறி அழுது இருக்கிறான். அவனுக்கு, தாயார் ஆறுதல் கூறினார். இருந்த போதிலும் சசீந்திரா தனது நண்பர்கள் மற்றும் உடன் படித்தவர்களுடன் சரியாக பேசவில்லை. தனது தாயாருடனும் சரியாக பேசாமல் தனியாகவே இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சம்பவத்தன்று வழக்கம்போல அவன் பள்ளிக்கு சென்றான். பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்ததும், அவனுடன் தாயார் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தார். பின்னர் அவனுக்கு காபி போட்டு கொடுப்பதற்காக பால் வாங்க கடைக்கு சென்றார். பின்னர் பால் வாங்கிவிட்டு அவர் வீட்டுக்கு திரும்பி வந்தார். அங்கு வழக்கமாக இருக்கும் இடத்தில் சசீந்திரா இல்லை. உடனே அவனின் பெயரை சொல்லி அழைத்தபடி பியூலா தேடினார்.


படுக்கை அறைக்கு சென்றபோது அங்கு சசீந்திரா தூக்கில் தொங்குவதை பார்த்து அதிர்ச்சி அடைந்ததுடன் கதறி துடித்தார். பின்னர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் சசீந்திராவை மீட்டு அந்த பகுதியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார். அங்கு அவனை பரிசோதித்த டாக்டர்கள், ஏற்கனவே சசீந்திரா உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த வடவள்ளி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சசீந்திராவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், வகுப்பில் எப்போதுமே முதல் மதிப்பெண் எடுக்கும் சசீந்திரா அரையாண்டு தேர்வில் 2வது இடம் வந்ததால் மன அழுத்தத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# விநாயகர் சிலையை தொட்டு வணங்கிய காட்டுயானை: கோவையில் ஆச்சரியம்

கோவை, ஜன.11

கோவையை அடுத்த தொண்டாமுத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் காட்டுயானைகளின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. உணவு மற்றும் தண்ணீர் தேடி வனப்பகுதியை விட்டு வெளியே வரும் அந்த யானைகள் விவசாய தோட்டங்கள் மற்றும் வீடுகளை சேதப்படுத்தி அட்டகாசம் செய்து வருகின்றன.



இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவில் காருண்யா நகரை அடுத்த சத்யாஅவென்யூபகுதியில் ஜெயக்குமார் என்பவரது வீட்டின்பின்பக்க நுழைவு வாயிலை காட்டுயானை ஒன்று உடைத்து உள்ளே நுழைந்தது. பின்னர் சிறிது நேரம் வீட்டு வளாகத்தில் உலா வந்தது. தொடர்ந்து முன்பக்க நுழைவு வாயில் வழியாக வீட்டை விட்டு வெளியே வந்தது.

அதற்கு முன்பாக, வீட்டு வளாகத்தில் இருந்த விநாயகர் சிலையை துதிக்கையால் தொட்டு வணங்கியது. இது தொடர்பான காட்சிகள், அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் வீடியோவாக பதிவாகி இருந்தன. அந்த வீடியோ காட்சிகள், சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாக பரவி வருகின்றன. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டு உள்ளது. மேலும்அப்பகுதி பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர்.

# பொங்கல் பண்டிகை எதிரொலி: ஆம்னி பஸ்களின் கட்டணம் கிடுகிடு உயர்வு

சென்னை, ஜன.11

பண்டிகைக் காலங்கள் என்றாலே ஆம்னி பஸ் உரிமையாளர்களுக்கு கொண்டாட்டம் தான். அதுவரை சாதாரண கட்டணங்களில் இயங்கி வரும் ஆம்னி பஸ்கள், பண்டிகை காலம் நெருங்கியதும் கட்டணங்கள் 2 முதல் 3 மடங்கு அதிகரித்துவிடும்.

வருகிற 14ந்தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. பொங்கல் பண்டிகையை சொந்த ஊரில் கொண்டாடுவதற்காக வெளியூர்களில் உள்ளவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். குறிப்பாக சென்னையில் வசித்து வரும் வெளியூர் மக்கள் பஸ், ரெயல்களில் தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணிப்பது வழக்கம்.



ரெயில்களில் பயணிக்க முன்பதிவு டிக்கெட்டுகள் தீர்ந்துவிட்ட நிலையில், மக்களின் அடுத்த தேர்வு ஆம்னி பஸ்கள்தான்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டாலும் பெரும்பாலான பயணிகள் முதல் விருப்பம் ஆம்னி பஸ்கள் தான். காரணம், கிளாம்பாக்கம் சென்று அரசு பஸ்களை பிடிப்பதை விட கோயம்பேட்டில் இருந்தே தனியார் பஸ்களில் பயணிக்க முடியும் என்பதால் ஆம்னி பஸ்களை தேர்வு செய்கிறார்கள்.

இதனால் சென்னையில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் ஆம்னி பஸ்களின் கட்டணம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

குறிப்பாக தென் மாவட்டங்களுக்கு செல்லும் பஸ்களின் கட்டணம் மிகவும் உச்சம் தொட்டு உள்ளது. அதாவது, வழக்கமாக நெல்லை, நாகர்கோவிலுக்கு ரூ.800, ரூ.850க்கு ஆம்னி பஸ்களில் வசூலிக்கப்படும் பயணக் கட்டணம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பன்மடங்கு அதிகரித்து உள்ளது.

பொங்கல் பண்டிகையை கொண்டாடுவதற்காக சென்னையில் இருந்து பெரும்பாலான மக்கள் 10ந் தேதி முதல் 13ந் தேதி வரை தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். அந்த வகையில், மேற்குறிப்பிட்ட தேதிகளில் தென்மாவட்ட நகரங்களான நெல்லை மற்றும் நாகர்கோவிலுக்கு செல்வதற்கு தனியார் ஆம்னி பஸ்களில் அதிகபட்சமாக ரூ.4 ஆயிரம் வரை வசூலிக்கப்படுகிறது.

இதே போன்று, மேற்கு மாவட்டமான கோவைக்கு அதிகபட்சமாக ரூ.2,850 வசூலிக்கப்படுகிறது. ஆம்னி பஸ்களின் அதிகபட்சமான கட்டண கொள்ளை ஆன்லைனில் வெளிப்படையாக இருந்த போதிலும் இது குறித்து தமிழக அரசு போக்குவரத்துத்துறை நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வேதனை அளிப்பதாக பயணிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

## 'சல்மான் கான் ஒரு...' கங்கனா ரனாவத்



2006ம் ஆண்டு வெளியான 'கேங்ஸ்டர்' திரைப்படம் மூலம் திரையுலகத்திற்கு அறிமுகமானவர் கங்கனா ரனாவத். தனது முதல் படம் அபார வெற்றி பெற்றது அதுமட்டுமின்றி சிறந்த நடிகைக்கான பிலிம்பேர் விருதை பெற்றார். அடுத்தடுத்து வோ லம்ஹே, பேஷன், குயின் என ஹிட் கொடுத்தார்.

ஜெயம் ரவி நடிப்பில் வெளியான 'தாம் தூம்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். அதன்பின்னர் மறைந்த முதல்அமைச்சர் ஜெ. ஜெயலலிதா வாழ்க்கை வரலாறாக உருவாகி வெளியான 'தலைவி' படத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார்.

இவர் தற்போது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, நாடு முழுவதும் அமல்படுத்திய அவசரநிலை பிரகடனத்தை மையமாக வைத்து உருவாகி இருக்கும் 'எமர்ஜென்சி'படத்தில் நடித்திருக்கிறார். இப்படம் வருகிற 17ம் தேதி வெளியாக உள்ளநிலையில், தற்போது படத்தின் புரமோஷன் பணிகள் நடந்து வருகின்றன.

அந்த வகையில், புரமோஷன் நிகழ்ச்சியில் பேசிய கங்கனா, சல்மான் கான் ஒரு நல்ல நண்பர் என்று கூறினார். இது குறித்து அவர் கூறுகையில்,

"சல்மான் கான் எனக்கு ஒரு நல்ல நண்பர். நாங்கள் இருவரும் ஒன்றாக நடிக்க பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், உங்களுக்குத் தெரியும், எப்படியோ அது நடக்கவில்லை, பார்ப்போம்' என்றார்.

## மீண்டும் இணையும் ஆஷிகி 2 கூட்டணி?



தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியான 'சாஹோ' படத்தில் பிரபாஸ் ஜோடியாக நடித்து பிரபலமானவர் ஷ்ரத்தா கபூர். இந்தியில் 'ஆஷிக் 2, ஹைதர், ராக் ஆன்2, ஒகே ஜானு' உள்ளிட்ட பல வெற்றி படங்களில் நடித்து முன்னணி நடிகையாக இருக்கிறார்.

இவர் கடைசியாக 'ஸ்ட்ரீ 2' படத்தில் நடித்திருந்தார். ரூ.700 கோடிக்கும் அதிகமாக வசூலித்தது. இந்நிலையில், ஷ்ரத்தா கபூரின் அடுத்த படம் பற்றிய தகவல் வெளியாகி இருக்கிறது.

அதன்படி, இயக்குனர் மோஹித் சூரியின் அடுத்த படத்தில் அதித்யா ராவ் கபூருக்கு ஜோடியாக ஷரத்தா கபூர் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. கடந்த 2013ம் ஆண்டு மோஹித் சூரி இயக்கிய ஆஷிகி 2 படத்தில் இருவரும் நடித்திருந்தனர்.

தற்போது வெளியாகி இருக்கும் தகவல் உண்மையாகும் பட்சத்தில் இந்த கூட்டணி 2வது முறையாக இணையும் படமாக இது இருக்கும். இதனையடுத்து இருவரையும் ஒன்றாக மீண்டும் திரையில் காண ரசிகர்கள் ஆவலுடம் உள்ளனர்.

## 'பாக்யம் கதாபாத்திரம் எல்லோருக்கும் பிடிக்கும்' ஐஸ்வர்யா ராஜேஷ்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் ஐஸ்வர்யா ராஜேஷ். 'அட்டகத்தி' படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்த இவர் ,'காக்கா முட்டை, தர்மதுரை, ரம்மி, கனா, சாமி 2, வடசென்னை' உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானார்.

சமீபத்தில்,இவர்மலையாளநடிகர்டொவினோ தாமஸ்நடிப்பில்உருவானஏ.ஆர்.எம்படத்திலும், கன்னட நடிகர் சிவராஜ்குமாருக்கு ஜோடியாக 'உத்தரகாண்டா' படத்திலும் நடித்திருந்தார். தற்போது இவர் தெலுங்கில் வெங்கடேஷ் நடித்துள்ள சங்கராந்திகி வஸ்துன்னம் படத்தில் நடித்திருக்கிறார். இப்படம் வரும் 14ம் தேதி வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தில்தனது கதாபாத்திரத்தை பற்றி நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் பகிர்ந்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'இப்படத்தில் எனது பாக்யம் கதாபாத்திரம் எல்லோருக்கும் பிடிக்கும். இப்படியொரு கதாபாத்திரம் எனக்கு கிடைத்தது பெரிய அதிர்ஷ்டம். தெலுங்கில் ஒரு பெரிய படத்தில் ஒரு சிறந்த கதாபாத்திரத்தில் நடிக்க விரும்பினேன். அந்த கனவு இதன் மூலம் நிறைவேறியது' என்றார்.

## ஆக்கி இந்தியா லீக்: கலிங்கா லான்சர்ஸ் அணி தொடர்ந்து 2வது வெற்றி



6வது ஆக்கி இந்தியா லீக் தொடர் ஒடிசாவின் ரூர்கேலாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று இரவு நடந்த 17வது லீக் ஆட்டத்தில் வேதாந்தா கலிங்கா லான்சர்ஸ், கோனாசிகா அணியை எதிர்கொண்டது. இரு அணிகளும் சம பலத்துடன் மல்லுக்கட்டியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது. முதல் பாதியில் இரு அணிகளும் 11 என்ற கோல்கணக்கில் சமனில் இருந்தன.

இதனையடுத்து நடைபெற்ற 2வது பாதியில் கலிங்கா லான்சர்ஸ் அணி மேலும் ஒரு கோல் அடித்து முன்னிலை பெற்றது. முடிவில் 21 என்ற கோல் கணக்கில் வேதாந்தா கலிங்கா லான்சர்ஸ் வெற்றி பெற்றது. வேதாந்தா கலிங்கா லான்சர்ஸ் தொடர்ச்சியாக பெற்ற 2வது வெற்றி இதுவாகும். கலிங்கா லான்சர்ஸ் அணி தரப்பில் அன்டோயின் கினா மற்றும் அரன் ஜலேவ்ஸ்கி தலா ஒரு கோல் அடித்து அணி வெற்றி பெற உதவினார். கோனாசிகா தரப்பில் சுனில் மட்டும் ஒரு கோல் அடித்தார்.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஷ்ராச்சி ரார் பெங்கால் டைகர்ஸ்தமிழ்நாடு டிராகன்ஸ் (இரவு 8.15 மணி) அணிகள் மோதுகின்றன.

## உலகிலேயே அவரிடம்தான் மிகச்சிறந்த தடுப்பாட்டம் உள்ளது அஸ்வின் பாராட்டு



இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில் விளையாடியது. இதில் 31 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று10வருடங்களுக்குபின்பார்டர்கவாஸ்கர்கோப்பையை கைப்பற்றி அசத்தியது. அதன்படி நடைபெற்ற இந்த தொடரில் இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ரிஷப் பண்ட் தடுப்பாட்டத்தில் கவனத்தை செலுத்தாமல் அதிரடியாக விளையாட முயற்சித்து முக்கியமான தருணங்களில் விக்கெட்டை தாரை வார்த்தார். இதனால் அவரை 4வது போட்டியின்போது சுனில் கவாஸ்கர் 'முட்டாள்.. முட்டாள்' என்று நேரலையில் கடுமையாக விமர்சித்தார். மேலும் பல முன்னாள் வீரர்களும், ரசிகர்களும் ரிஷப் பண்ட் தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினர். இந்நிலையில் ரிஷப் பண்டிடம் உலகிலேயே மிகச்சிறந்த தடுப்பாட்டம் இருப்பதாக இந்திய முன்னாள் வீரர் அஸ்வின் பாராட்டியுள்ளார். இது குறித்து அஸ்வின் பேசியது பின்வருமாறு: "ரிஷப் பண்ட் தடுப்பாட்டம் விளையாடி மிகவும் அரிதாகவே விக்கெட்டை இழப்பார். ஏனெனில் இந்த உலகிலேயே அவரிடம் சிறந்த தடுப்பாட்டம் இருக்கிறது. இப்போதெல்லாம் தடுப்பாட்டம் என்பது மிகவும் சவாலான ஒன்றாக மாறியுள்ளது. அவருக்கு எதிராக வலைப் பயிற்சியில் நான் நிறைய பவுலிங் செய்துள்ளேன். அப்போது போல்ட், எட்ஜ், எல்பிடபிள்யூ முறைகளில் அவர் அவுட் ஆனதில்லை. அந்த வகையில் தனது கைகளில் அவர் சிறந்த தடுப்பாட்டத்தை வைத்துள்ளார்." என்று கூறினார்.

## அடிலெய்டு டென்னிஸ்: இறுதிப்போட்டிக்கு முன்னேறினார் மேடிசன் கீஸ்

அடிலெய்டு சர்வதேச டென்னிஸ் போட்டி ஆஸ்திரேலியாவில் நடந்து வருகிறது. இந்த தொடரில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் மேடிசன் கீஸ், ரஷியாவின் லியுட்மிலா சாம்சோனோவா உடன் மோதினார். இந்த போட்டியில் முதல் செட்டை 75 என்ற புள்ளிக்கணக்கில் லியுட்மிலா சாம்சோனோவாவும், 2வது செட்டை 75 என்ற புள்ளிக்கணக்கில் மேடிசன் கீஸும் கைப்பற்றினர். தொடர்ந்து நடைபெற்ற 3வது செட்டில் 30 என்ற புள்ளிக்கணக்கில் மேடிசன் கீஸ் முன்னிலையில் இருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக லியுட்மிலா சாம்சோனோவா காயம் அடைந்தார். இதன் காரணமாக அவர் போட்டியில் இருந்து வெளியேறினார். இதனால் மேடிசன் கீஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். நாளை நடைபெறும் இறுதிப்போட்டியில் மேடிசன் கீஸ், அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா கஜகஸ்தானின் யூலியா புடின்ட்சேவா ஆகியோரில் ஒருவரை சந்திப்பார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.